1975 ஏப்ரல் 7]

DR. H. V. HANDE : My submission is that there is variance between the figures given in brochures and the figures in the profit and loss account. I say this because I had got with great difficulty one copy of the profit and loss account filed with Registrar of Companies. Only if we have the accounts we will know whether the figures given by the Transport Department are correct or not. But we are at a handicap because we have not been supplied that document. There is a lot of discrepancy between the two.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு, பேசிக் கொண்டே போகிறீர்களே.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அசெம்பிளி டிபார்ட்மென்டினால், உரிய நேரத்தில் கொடுக்க முடியாமல் போய்விட்டதா? இல்லாவிட்டால், "இப்பொழுது கொடுத்து விட வேண்டாம், அப்படிக் கொடுத்து விட்டால், பல விஷயங்களை அதிலிருந்து கிளப்பிவிடுவார்கள், விவகாரம் வளர்ந்துவிடும்' என்று அமைச்சர் அவர்கள் கூறி, அதன்படி அசெம்பிளி டிபார்ட்மெண்ட் கொடுக்காமல் இருக்கிறதா, என்பது தெரிய வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போக்குவரத்து கழகங்களின் ஆண்டறிக்கைகள் உறுப்பினர்களுக்கு அவ்வப்போது சட்ட மன்றத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இப்பொழுது ஹாண்டே அவர்கள் கூறியதுபோலவே சில உறுப்பினர்கள், காப்பிகள், தங்களுக்கு சரியான நேரத்தில் வரவில்லை என்று சொன்னார்கள்.

1974 ஆம் ஆண்டுக்கான பாலன்ஸ் ஷீட் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

We have placed it on the table of the House. It is not available to members at this time now.

1975 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் மார்ச் மாதம் முடிந்து 6 மாதங்களுக்குள் பாலன்ஸ் ஷீட் கொடுக்க சட்டத்திலே வழியிருக்கிறது. ஏற்கனவே வழங்கப்பட்ட பாலன்ஸ் ஷீட் 1974 ஆம் ஆண்டுக்குரியதுதான்.